TAMIL NADU LEGISLATIVE LIBRARY
3 = DEC 1981

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க் கிழமை, 1981 ஏப்ரல் 14

சித்திரை 2, துன்மதி — திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.''

ஒருவருக்குத் துணையினது நன்மை செல்வம் ஒன்றினையும் கொடுக்கும். அதனோடு அவர் செயல் நலமும் பெற்றிருந்தால், அவர் விரும்பும் எல்லா நன்மைகளையும் அந்தச் செயல் நலம் தரும்.

1. இரங்கற் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான, டாக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள், 6-4-1981 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுப்பிரமணியம், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டுவரை இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவுகுறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்குப்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)